திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 98 பகுதி : 5 மே 2004

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

தொகுதி : 98
பகுதி : 5
மே 2004

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.1201911

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


இதழ்மணம் 153

அருளிச்செயல் கவிதைக் கோட்பாடுகள் 155
பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன்

திருக்குறளில் இயற்பியல் கூறுகள் 162
முனைவர் மெ.மெய்யப்பன்

மதுரைக்காஞ்சியில் பொழுதுரை நிகழ்வுகள் 166
முனைவர் தி.நெல்லையப்பன்

திராவிடமொழி ஆராய்ச்சியும் முறையும் 172
டாக்டர் திரு.கமில்சுவேலபில்

தமிழ்மயக் கோட்பாட்டின் வளர்ச்சி வரலாறு 179
முனைவர். அரசக்கண்ணன்

செருத்துணையாரும் புகழ்த்துணையாரும்
அவதரித்த திருப்பதிகள். 187
திரு. சதாசிவபண்டாரத்தாரவர்கள்

# இதழ்மணம்

"அருளிச் செயல் கவிதைக் கோட்பாடுகள்" என்னும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராசன் அவர்கள் தொடர் கட்டுரை இவ்விதழில் தொடங்குகிறது. பேராசிரியர் அரங்கராசன் அவர்கள்,

"கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்னும் மெய்மொழிக்கு ஏற்ப ஒழுகும் சான்றோர். வைணவப் பாரம்பரியசாத்திர தோத்திரங்களின் பரப்பும் நுட்பமும் தேர்ந்த கல்வியாளர்.

ஆழ்வார் பாசுரங்கள் எண்ணியிருந்து தொடுக்கப்பட்டவை யல்ல; தெய்வ மானுட உணர்வின் சங்கமம். வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்காண் என்பது தேவாரம். வடமொழியும் தென்தமிழும் அநாதி. ஒத்த சிறப்புடைய என்பதைப் பேராசிரியர் பண்டை உரையாசிரியர் வழிநின்று விளக்கும்பாங்கு கற்று இன்புறத்தக்கது. சில கருதுகோள்களை வைத்துள்ளார்; இனிவரும் கட்டுரைகளில் விளக்கங்கள் கிடைக்கும்.

திருக்குறளில் இயற்பியல் கூறுகள் என்னும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் மெ.மெய்யப்பன் அவர்கள் எழுதும் ஆறாவது கட்டுரை இடம் பெறுகிறது. ஹைசன்பர்க்கின் சமனின்மைக்கோட்பாட்டைத் திருக்குறளோடு இணைத்துப் பார்க்கும் நுட்பம் அரியமுயற்சியாகும். இலக்கியம் காட்டும் வாழ்வியல் சிந்தனைகளை அறிவியல் கோட்பாட்டுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது பேராசிரியருக்கே சாலும். அதன் வழிப்பேராசிரியர் அறிவியல் கடலில் மூழ்கி நன்முத்துக்களை வாசகர்களுக்கு அளிக்கிறார்.

பேராசிரியர் முனைவர் அரசக்கண்ணனார் சோழநாட்டின் தலைநகரில் அரசுக்கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற

மூதறிஞர். மொழிநூல் சிந்தனையாளர். அவர்கள் தொல்காப்பியம் தொடங்கி இன்றுவரை தமிழ்மயக் கோட்பாட்டின் அடிப்படையில் இலக்கண ஆசிரியர்கள் வகுத்த கருத்துக்களை மீள்பார்வையிட்டு தனித்தமிழ்க் கோட்பாட்டின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும் செய்திகள் தமிழறிஞர்களின் சிந்தனைக்குரியது. ஆராய்ச்சி மாணவர்களுக்கு இக்கட்டுரையின் கண் பல நுட்பமான செய்திகள் பொதிந்திருப்பதும் மேலும் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்வதற்கும் இக்கட்டுரை பயனுடையதாகும்.

*முனைவர் தி.நெல்லையப்பன் அவர்கள் மதுரைக் காஞ்சியில் பொழுதுரை நிகழ்வுகள் என்னும் ஆய்வுக்கட்டுரை அளித்துள்ளார்கள்.*

செக் நாட்டு தமிழறிஞர் *முனைவர் கமில் சுவேலபில் திராவிட* மொழி ஆராய்ச்சியும் முறையும் என்னும் கட்டுரை செந்தமிழ்த் தொகுதி 54ல் இரண்டாம் பகுதியில் வெளிவந்துள்ளது. அக்கட்டுரை மீண்டும் இவ்விதழில் வெளிவருகிறது.

## இரகுநாத சேதுபதியின் தமிழ்க்காதல்

சில கனவான்களைச் சுட்டிக் காட்டி, "இவர்கள், இராமநாதபுரம் இரகுநாத சேதுபதியின் மீது ஒரு துறைக்கோவை பாடி ஒவ்வொரு கவிக்கும் ஒவ்வொன்றாக நாலூறு பொன் எழுமிச்சம்பழம் பரிசு பெற்ற அமுத கவிராயருடைய பரம்பரையினர். இந்த இடம் அந்தக் கோவைக்காக அமுத கவிராயருக்குச் சேதுபதி அரசரால் விடப்பட்ட 'பொன்னங்கால்' என்னும் கிராமம். இவர்கள் இப்போது திருமகள் விலாசம் பெற்றுச் சௌக்கியமாக இருக்கிறார்கள்" என்று கூறிப் பழக்கம் செய்வித்தனர்.

*உ.வே.சா. என்சரித்திரம்*

# அருளிச்செயல் கவிதைக் கோட்பாடுகள்

*பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன்*

நம்மாழ்வார் வேதம் தமிழ்செய்தார்; அவ்வேதத் தமிழே திருவாய்மொழி என்று போற்றப்பட்டது. திருவாய் மொழிக்குப் பேருரை வரைந்தவர் நம்பிள்ளை என்று புகழப்பெற்ற நம்பூர் வரதராஜர். அவர் திருவாய்மொழிக்கு உரைப்பாயிரம் என்ற நுழைவாயிலை அமைத்துத் திருவாய்மொழி கற்கப்புகுவார் அறிந்துகொள்ள வேண்டிய அரிய பல செய்திகளைத் தொகுத்து வழங்கியுள்ளார். அவற்றுள் பக்திப் பனுவல்களின் அடிப்படைக் கோட்பாடுகளை ஆராய்ந்து இலக்கியத்திறனாய்வாளர்களுக்கு நல்கியுள்ளார்.

## உணர்ச்சி வெளிப்பாடு

ஆழ்வார் இறைவனுடைய எழில்நலன்களில் ஆழமூழ்கி அனுபவித்தார்;

அவ்வநுபவம் உள்ளடங்காது புறம்பொசிந்து சொல்மாலைகளாக வெளிப்பட்டது.

இவ்வாறு நம்பிள்ளை கருதுகின்றார்.

இங்கே அவருடைய திறன்காண் நெஞ்சம் வினா ஒன்றை எழுப்புகிறது.

இறை நுகர்ச்சி புறம்பே சொற்களாக வழிந்து புறப்பட்டால், அஃது கவிதைகளாய் விழுந்து யாப்பு அமைதிகளை எப்படிப் பெற்றது? ஈண்டு ஒன்றை கருத்திற்கொள்ளவேண்டும்.

ஆழ்வார் பாசுரங்கள் எண்ணியிருந்து ஆரஅமர நினைந்து தொடுக்கப்பட்ட செய்யுட்கள் அல்ல; அவை தாமாகவே முகிழ்த்த உணர்ச்சிக் கொப்பளிப்புகள். இஃதே முதல் அடிப்படைக் கோட்பாடு.

## தடையும் விடையும்

அப்படியானால், திடீரெனத் தோன்றும் வெளிப்பாடுகள்

எங்ஙனம் இலக்கணச் சட்டங்களுக்கு உட்பட்டுப் பாயும்?

இவ்வாறு வடமொழிவாணர்கள் தடையை எழுப்பினர்.

இதற்கு நம்பிள்ளை வான்மீகி முனிவர் இராமாயணத்தை இயற்றியது எவ்வாறு? வேட்டுவனாக வாழ்ந்த வான்மீகி வியாகரணவிதிகளுக்கு உட்பட்டு இராமாயணத்தை யாத்தது யாங்ஙனம்? என்று எதிர் வினா எழுப்பித்தம்முடைய முடிவை எடுத்தியம்புகிறார்.

வான்மீகி முனிவன் சோகவேகத்திற் சொல்லிய ஒரு சாபவுரை நான்முகன் அருளால் கவிதையிலக்கணங்களுடன் ஒரு சுலோகமாக மாறியது.

மாறியதோடு மட்டுமன்றி அதுவே இராமாயணச்சுருக்கமாகச் செறிவுடன் அமைந்து மங்கலவாழ்த்தாகவும் அமைந்தது.

### கருவுரையும் கனிவுரையும்

பேடையும் சேவலுமாகக் கூடியிருந்த கிரவுஞ்ச பட்சிகள் இரண்டில் கானகவேடன் ஒருவன் அம்பினால் எய்து சேவற்பறவையை வீழ்த்தினான். அது தலைசுற்றி உயிர்நீத்தது; உடன் பேடைப்பறவையும் வீழ்ந்து கதறியது. இதைக் கண்ணுற்றார் வான்மீகி முனிவர்.

அவர் கொடுத்தசாபம்
"மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வம்
அகமச்சாச்வதீஸ் ஸமா;
யத் க்ரௌஞ்ச மிதுநாத்
ஏகம் அவதீ: காமமோஹிதம்"
என்பதாகும்.

இதன் பொருள்:

"வேடனே, நீ எந்தக் காரணத்தால் கிரௌஞ்சபட்சிகள் இரட்டையிலிருந்து காமத்தால் மோகித்திருந்த ஒரு ஆண் பட்சியை கொன்றாயோ அதனால் நிலையான இருப்பை

அடையமாட்டாய்" அதாவது பேயாகமாறி அலைந்து துன்புறுவாய் என்றதாகும்.

சாபம் அளித்ததால் மனத்துயரடைந்த வான்மீகி முனிவரின் முன் நான்முகக் கடவுள் தோன்றி அச்சாபவுரையே மங்கல முன்னுரையாக இராமாயணத்திற்குப் பொருந்துமாறு அருள்செய்தார்; தாமே கலைமகளை முனிவரின் வாக்கில் நுழைந்து புறப்படுமாறு செய்ததையும் கூறியருளினார்.

இனி, மங்கலச்சுலோகமாக அமைந்ததன் பொருள்:

"திருமகள் கேள்வனே, தேவரீர் எந்தக் காரணத்தால் அரக்கர்களாகிற இராவண மண்டோதரிகளில் மன்மதனால் பீடிக்கப்பட்ட இராவணனைக் கொன்றீரோ, அதனால் காலம் நிலைக்கும் வரை வாழக் கடவீர்!"

இறைவனுடைய படைப்பில் ஒரு கூறான நான்முகனுக்கே இத்தகைய திறன் உளதானால், முழுமுதற்கடவுளான திருமாலின் திருவருள் முன்நிற்குமானால், ஆழ்வாரின் சொல் வெளிப்பாடுகளில் ஏன் இலக்கணவிதிகள் பொருந்தாது? பொருந்தப் பெறுவதில் வியப்பேதுமில்லையே! அயனுக்கும் அரனுக்கும் அந்தர்யாமியாய் உள்ளுறையும் திருமாலே தமக்கு அருள் செய்ததை ஆழ்வாரே புலப்படுத்துகிறார்:

தெருளும் மருளும்மாய்த்துத்தன்திருந்து செம்பொறகழலடிக்கீழ்
அருளியிருத்தும் அம்மானாம் அயனாம் சிவனாம் திருமாலால்
அருளப்பட்ட சடகோபன் ஓராயிரத்துள் இப்பத்தால்
அருளி அடிக்கீழ் இருத்தும் நம்அண்ணல் கருமாணிக்கமே
(திருவாய்மொழி: 8.8.11)

## இலக்கணங்களை மொழிந்தவர் யார்?

இனி, அடுத்து எழுப்பப்பட்ட தடையை நோக்குவோம். உலகியல் வசப்பட்ட யாரோ சிலர் இயற்றிய இலக்கண விதிகளுக்கு திருமாலால் அருளப்பட்டுப் புறம்பொசிந்த திருவருட்பாசுரங்கள் கட்டுப்படவேண்டிய கடப்பாடு யாது?

இவ்வினாவிற்கு நம்பிள்ளை அரியமுறையில் தெரிவிக்கும் உண்மையொன்றைத் தமிழ்ச் சான்றோர்கள் உளங்கொள்ள வேண்டும்.

அகத்தியம், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களை இயற்றியவர்களும் இறைவன் அருள்பெற்ற சான்றோர்களேயாவர். இறைவனே உலகத்தினர் உய்ய அத்தகைய இலக்கண சாத்திரங்களை அச்சான்றோர்களைக் கருவியாகக் கொண்டு வெளிப்படுத்தினான்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் வைணவப் பேராசிரியர் தாமியற்றிய 'ஆசாரிய இருதயம்' என்னும் சீரியநூலில் இந்த உண்மையைத் தெளிவுபடுத்தினார்.

"முனிவரை இடுக்கியும் முந்நீர் வண்ணனாயும் சாஸ்திர தாற்பரியங்களை வெளியிட்டருளினான்" என்று குறிப்பிடுகிறார். முனிவர்களிடம் ஆவேசித்து இலக்கணம் போன்ற சாத்திரங்களையும் முந்நீர்வண்ணனாய்த்தானே பகவத்கீதை போன்ற சாத்திரதாத்பரியங்களையும் வெளியிட்டான் என்பது அவருடைய கருத்தாகும்.

அகத்தியர் தொல்காப்பியர் இருவரும் தமிழ்மாமுனிவர்கள் என்று அறிக. குலசேகராழ்வார் அகத்தியரை 'தமிழ்மாமுனிவர்' என்று சிறப்பிக்கிறார்.

"வண்தமிழ்மாமுனி கொடுத்தவரிவில் வாங்கி"

(பெருமாள் திருமொழி 10-5)

என்பது குலசேகரர் திருவாக்கு. தமிழ்மாமுனிவரின் தலைமாணாக்கர் தொல்காப்பியர் என்பதை நினைத்துப் பார்க்கவும்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் கருத்துக்குக் கலியன் திருமங்கையாழ்வார் பாசுரமே வித்திட்டது. அதுவருமாறு:

"கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும்
சொற்பொருள் தானும் மற்றை

நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும்
நீர்மையினால் அருள்செய்து" (பெ.தி.மொ. 2.8.5.)

இங்கு 'சொற்பொருள்' என்பதற்கு "பதங்களை நிர்வஹித்துக் கொடுக்கக்கூடிய வியாகரணமும் அர்த்த விசாரம் பண்ணக்கூடிய மீமாம்ஸையும்" என்று பெரிவாச்சான்பிள்ளை உரைவகுத்த நுட்பம் மிக அரியதொன்று. இவற்றால் இறை நுகர்ச்சி முதிர்ந்து புறப்படும் மொழிகள் அனைத்தும் இறையருள் பெற்று ஆக்கப்பெற்ற சாத்திரங்களாகிய இலக்கண நெறிகளைப் பின்பற்றியே அமையும் என்பது பக்தி இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையாகக் கொள்ளத்தக்கது.

செந்தமிழும் வடமொழியும்

இனி ஒரு தடை முன் நிற்கிறது!

முந்நீர் வண்ணனான இறைவன் முனிவர்களை ஆவேசித்து அவர்களைக் கொண்டு வெளியிட்டவை தேவபாஷையான ஸம்ஸ்கிருதத்தில் அமைந்த சாஸ்திரங்களே அன்றோ! எனில்; அவ் ஐயுறவு சிறிதும் வேண்டாம்.

"வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள் செய்து"

(பெ.தி.மொ. 2.8.5.) என்ற விடத்தில் 'பிறர்க்கு' என்பது மானிடரைக் குறிக்கும் என்று பெரியவாச்சான்பிள்ளை தெளிவுபடுத்தியுள்ளார்.

அகஸ்தியரைக்கொண்டு தமிழுக்கு இலக்கணம் கண்டவனும் திருமாலே; பாணிநியைக் கொண்டு வடமொழிக்கு இலக்கணம் கண்டவனும் இவனேயாவான்!

இனி, தேவபாஷையான ஸம்ஸ்க்ருதத்திற்குள்ள பெருமைகள் எல்லாம் மானிடமொழியான திராவிடத்துக்கு உளவோ? என்று ஐயுறவு கொள்ளவேண்டாம்.

"செந்திறத்ததமிழ் ஓசை வடசொல்லாகி, என்கையாலே ஆகஸ்தியமும் அநாதி" என்று ஆசாரிய ஹிருதயத்தில் அழகிய

மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்து அவ் ஐயத்தை அகற்றியுள்ளார்.

திருமங்கையாழ்வார் எம்பெருமான் வடசொல்லையும் தென் தமிழ்ச் சொல்லையும் தனக்கு ப்ரகாரமாகக் கொண்டு விளங்குகிறான் என்பதை உணர்த்தும்போது 'செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி' (தி.நெ.தா.4) என்று அருளிச் செய்தார்.

ஈண்டு ப்ரகாரம் என்பது ஒரு பொருளின் விட்டு நீங்காத அடைநிலை; ப்ரகாரி என்பது அடைகொளியாகிற பொருள். அதாவது விசேஷணம் -விசேஷ்யம் என்ற தொடர்பு. (அடை-அடைகொளி உறவு) எனவே தமிழையும் வடமொழியையும் இறைவனுக்கு அவை விட்டு நீங்காத உறவுடைய விசேஷணங்கள் என்பது ஆழ்வார் அபிப்பிராயம்.

இவ்விடத்து, மணவாளமாமுனிகள் என்ற பெருந்தகைச் செந்தமிழ் வேதியர் செப்பியுள்ள உரைக்குறிப்பு காணத்தக்கது:

"ஸம்ஸ்க்ருதத்தோடு ஸஹபடிதமும் (உடன் சேர்க்கப்பட்டது)

ப்ரதமோக்தமும் (முன்மொழியப்பட்டது) ஆகையாலே திராவிடமும் அநாதியாயுள்ளது என்கை. இத்தால் அநாதித்வம் (தோற்றமின்மை) ஸம்ஸ்கிருத திராவிட ஸாதாரணம் (பொது) என்றதாயிற்று"

ஸம்ஸ்கிருதமும் திராவிடமும்

இலக்கண நூல்களால் ஸம்ஸ்காரம் என்று சொல்லப்படும் செம்மைப்படுத்திய திறன் அமைந்துள்ளதால், வடமொழியானது ஸம்ஸ்கிருதம் என்று வழங்கப்பட்டது. (செம்மை-தூய்மை)

அதுபோன்று திராவிடமும் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட மொழி என்பதை 'ஆகஸ்தியம்' என்ற குறியீட்டால் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் உணர்த்துகிறார்.

ஆகஸ்த்தியம் என்றால் அகஸ்தியருடைய சம்பந்தம் பெற்றது என்று பொருளாகும். ஆகஸ்தியம் என்பது தசரதபுத்திரன் தாசரதி

என்பது போன்ற தொடர்பைக் காட்டுமோ என்று நினைக்க வேண்டாம். அதாவது அகஸ்தியரால் தோற்றுவிக்கப்பட்டது திராவிடம் என்று பொருளாகுமோ என்று நினைக்கவேண்டாம். ஆகஸ்தியமும் அநாதி என்றதால் அப்பொருள் ஏற்காது. எனவே அகஸ்தியரால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட சம்பந்தமேஏற்கும்.

முடிவு

இதனால் ஸமஸ்கிருதத்திற்போன்று திராவிடமான செந்திறத்த தமிழ்மொழியிலும் இறையருளுக்கு உரியோர்களான அகஸ்தியர் போன்ற முனிவர்களால் செய்யப்பட்டவையே இலக்கண நூல்களான சாத்திரங்கள் என்றும் அந்த சாஸ்திர மரியாதைகளுக்கு உட்பட்டு அருளாளர்களான ஆழ்வார் பாசுரங்களிலும் எழுத்தசை சீர்ப்பந்தம் அடிதொடை நிரல் நிரை ஓசை தளை இனம் யாப்புப் பாத்துறை பண்ணிசை தாளம் முதலான செய்கோலங்கள் தாமாகவே பொருந்தின என்றும் வைணவ உரையாசிரியர்களின் கருத்தாக அறிந்துகொள்ள வேண்டும்.

## சமகாலத்துச் சான்றோர்

அக்காலத்தில் சுந்தரம்பிள்ளை இயற்றிய மனோன்மணீய நாடகத்தில் சில பகுதிகள் காலேஜ் வகுப்புகளுக்குப் பாடமாக இருந்தன. அவற்றை நான் பாடம் சொல்லி வரும்போது பாராட்ட வேண்டிய இடத்திற் பாராட்டிவிட்டுப் பிழையாகத் தோற்றிய சிலவற்றைப் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொன்னேன். இவ்விஷயத்தை யார் மூலமாகவோ அறிந்த சுந்தரம்பிள்ளை அக்குற்றங்கள் இன்னவையென்று தெரிவிக்கும்படி எனக்குக் கடிதம் எழுதினார். நான் அங்கங்கே கண்டவற்றைத் தொகுத்து எழுதியனுப்பவே அவர் உசிதமான திருத்தங்களை ஏற்றுக்கொண்டு தம் நன்றியறிவைத் தெரிவித்தார். அது முதல் அடிக்கடி அவர் அன்போடு எனக்குக் கடிதங்கள் எழுதி வந்தார்.

*உ.வே.சா.என்சரிதம்*

# திருக்குறளில் இயற்பியல் கூறுகள்

## 6.ஹைசன்பர்க் ஐயப்பாட்டுக் கொள்கையும் இலட்சிய மனிதனும்.

*முனைவர் மெ.மெய்யப்பன், காரைக்குடி.*

நுண்பொருள் உலகு என்பது எளிதில் கண்டுணர முடியாத நுண்துகள்களாகும். இவற்றை விளக்கும் குவாண்டம் இயக்கவியலில், ஹைசன்பர்க் என்பார் ஒரு புதிய கருத்தை வெளிப்படுத்தினார். இதன்படி அளவீட்டு முறையில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மற்றும் ஒன்றின் அளவீட்டில் செய்கின்ற பிழை மற்றதில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற, இரு இயற்பியல் பண்புகளைச் சமகாலத்தில் அளவிடும்போது, ஒவ்வொன்றிலும் ஏற்படும் மிகக் குறைந்த பிழைகளின் பெருக்கற்பலன் 'பிளாங் மாறிலி' என்ற ஒரு குறிப்பிட்ட மதிப்பிற்குச் சமமாக இருக்கும். பிளாங் மாறிலியை 'h' என்ற குறியீட்டால் குறிப்பிடுவர்.

மிகவேகமாக இயங்கும் துகளின் இருப்பிடத்தைத் துல்லியமாக அறிவதும், அதன் நேர்கோட்டு உந்தத்தை அளவிடுவதும் இத்தகையதே. AX என்பது ஓர் இயங்கு துகளின் இருப்பிடத்தை அறிவதில் ஏற்படும் பிழையென்றும், AP என்பது அதன் உந்தத்தை அளவிட்டறிவதில் ஏற்படும் பிழையென்றும் கொண்டால்

$$AX\text{-}AP \geq h$$

எனக்கூறலாம் AX, AP என்பன மிகக்குறைந்த பிழைகளானால், சமனையும், மிகையான பிழைகளெனில் சமனின்மையையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

உயர் இயற்பியலில் ஹைசன்பர்க் தெரிவித்த இந்தக் கருத்துக்களைக் கொண்டு, ஓர் எலக்ட்ரான், அணுக்கருவின் கட்டமைப்பில் இடம் பெற முடியாது என்பதையும், அணுக்கருவின் துகள்களான புரோட்டானும், நியூட்ரானும் மிகு வலிமை, குறு நெடுங்கை விசையால் தங்களுக்குள் இடைவினை புரிந்துகொள்ளும்போது மெசான் (Meson) என்ற இடைநிலைத் துகளைப் பரிமாறிக் கொள்கின்றன என்பதையும் நிறுவ முடியும்

அணுக்கருவைப் பற்றிய பல உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கு ஹைசன்பர்கின் கொள்கை வழிகாட்டலாய் அமைந்தது என்று சொன்னால், அது தவறில்லை.

இதைப்போல ஆற்றலும், நேரமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருக்கின்றன. இதனால்

$$AE\ At \geq h$$

எனலாம். இதில் AE என்பது ஆற்றலை அளவிடுவதில் ஏற்படுகின்ற பிழை; At நேர அளவீட்டில் ஏற்படுகின்ற பிழை, இது பொதுவான நேரத்தைக் குறிப்பிடுவதில்லை; துகளோடு தொடர்புடைய ஒரு சிறப்பு நேரத்தைக் குறிப்பிடுகின்றது. எதன் ஆற்றலை அளவிட்டு AE என்ற பிழையை ஏற்படுத்தினோமோ அதன் ஆற்றல் நிலையின் வாழ்வுக் காலத்தை At எனக் குறிப்பிடலாம். இதன்படி ஒன்றின் வாழ்வு அதிகமாக இருக்குமானால், அதன் ஆற்றலை அளவிட்டறிவதில் மிகக்குறைந்த பிழையே ஏற்படும். மாறாகச் சுழிம வாழ்வுடைய ஒன்றின் ஆற்றலை அளவிடும்போது ஈரிலாப் (Infinity) பிழையை ஏற்படுத்துகின்றோம்.

ஹைசன்பர்க்கின் கொள்கையைப் புரிந்துகொள்ள எடுத்துக்காட்டாக, ஒரு பொருளின் எண்ணளவையையும் (Quantity) மற்றும் அதன் தரத்தையும் (Quality) குறிப்பிடுவார்கள். தரங்குறைந்தால் எண்ணளவை கூடும், தரமிகுந்தால் எண்ணளவை குறையும் என்பதை இயல்வாழ்க்கையில் எல்லோரும் நன்கு அறிந்திருக்கின்றார்கள். இதுபோன்றதொரு கருத்தை உள்ளடக்கிய ஒரு குறள் 'தெரிந்து செயல் வகை' எனும் அதிகாரத்தில் காணப்படுகின்றது.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்." (குறள் :466)

செய்யக் கூடாதனவற்றைச் செய்தாலும், செய்ய வேண்டியதைச் செய்யாது தவறினாலும் கேடுகள் விளையும், உடனடியாக விளையும் கேடுகளை மட்டுமே, கேடுகள் என்று வரையறுத்துக் கொண்டால், செய்ய வேண்டியன வற்றைச் செய்யாது விடுவதால்

ஏற்படும் பிறகேடுகள் கேடுகளாகத் தோன்றுவதில்லை. அதனால் பெரும்பாலானோர், செய்யக்கூடாததைச் செய்வதை ஒரு தவறாக எடுத்துக்கொள்வதைப் போல, செய்ய வேண்டியனவற்றைச் செய்யாதிருப்பதை ஒரு தவறாக நினைப்பதில்லை. உண்மையில் செய்யக்கூடாதனவற்றைச் செய்ய என்னென்ன கேடுகள் உடனடியா விளையுமோ, அதே அளவு கேடுகள் செய்ய வேண்டியனவற்றைச் செய்யாமையாலும் தாமதமாக விளையும். செய்யக்கூடாத தீய செயல்களோடு, செய்ய வேண்டிய பிறப்பிற்குரிய கடமைகளைச் செய்யத் தவறுவதையும் சேர்த்துச் சுட்டிக்காட்டும் வள்ளுவர் சிந்தனைகள் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

தீச்செயல் செய்தலாலும், நற்செயல் செய்யாமையாலும் மனிதன் இறைவனிடத்திலிருந்து வேறுபட்டு நிற்கின்றான். தீச்செயல் செய்தல் என்பது, தீச்செயல் செய்யாமைக்குச் செய்த பிழையாகும், அதுபோல நற்செயல் செய்யாமையானது, நற்செயல் செய்யும் அறநெறிக்குச் செய்யும் பிழையாகும். நேரடியாகவோ இல்லை மறைமுகமாகவோ செய்யும் இவ்விரு பிழைகளினால் மனிதன் ஒருபோதும் முழுமையான இறைவனாவதில்லை. இறைவன் எப்போதும் ஒரு படித்தர மனிதனே. இறைவன் அருங்குணங்களை ஒருசேரப் பெற்றிருப்பதாகவும், அதன் மூலம் உலகில் உள்ள எல்லா உயிரினங்களுக்கும் எவ்விதப் பாகுபாடுமின்றி நன்மைகளைத் தொடர்ந்து அளித்துவருவதாகவும் சான்றோர் கூறுவர். வாழும் மனிதர்கள் எல்லோரும் இறைவனை ஒரு இலட்சிய மனிதனாகக் கருதி, அந்த இலட்சிய நிலையை எட்டிப்பிடிக்க எண்ணத்தால் முயலவேண்டும் என்றும் அப்போதுதான் அனைத்துத்தரப்பு மக்களும் ஒருங்கிணைந்து மகிழ்ச்சியான, இனிய சமுதாய வாழ்க்கையைப் பெறமுடியும் என்றும் இதற்கு மேல் விளக்கம் அளிப்பர்.

தீச்செயலில் செய்யாமையும், நற்செயலில் செய்மையும் உயர்ந்த இறைநிலை என்றால், முன்னதில் செய்யாமையும், பின்னதில் செய்யாமையும், அல்லது முன்னதில் செய்மையும் பின்னதில் செய்மையும் இடைநிலையான மனித நிலையைக் குறிப்பிடும் என்றும், முன்னதில் செய்மையும் பின்னதில்

செய்யாமையும் தரந்ததாழ்ந்த அரக்க நிலையைக் குறிப்பிடும் என்றும் கூறலாம். நிலை வேறுபாடுகளுக்குக் காரணம் தீச்செயல் செய்யாமையிலும், நற்செயல் செய்மையிலும் செய்யும் பிழைகளாகும். இவ்விளக்கத்தின் அடிப்படையில் ஹைசன்பர்க் கொள்கைக்கு ஒப்பானதொரு சமனின்மைத் தொடர்பை உருவாக்கலாம்.

(தீச்செயல் செய்தல்) X (நற்செயல் செய்யாமை) ≥o

≥ (இறைவன் - மனிதன்)

தீச்செயல் செய்தல் அல்லது நற்செயல் செய்யாதிருத்தல் குறையக் குறைய ஒரு மனிதன், இறைவனுக்கு ஓரளவிற்கு நிகராகும் வாய்ப்பைப் பெறுகிறான். ஹைசன்பர்கின் சமனின்மைத் தொடர்பு போல, உலகில் எந்த மனிதருக்கும் இத் தொடர்பு சமனாவதில்லை. செய்வினைக்காகப் பிறந்த மனிதன் நற்செயல் செய்யாமையால் குழம்பும்போது, தீச்செயல் செய்தல் உட்புகுந்துவிடுகின்றது. தொடர்ந்து நற்செயலாற்றி வருவோரின் எண்ணத்தில் தீச்செயல் தீண்டுவதில்லை.

தீச்செயல், நற்செயல் என இரண்டு வகைச் செயல்களையும் செய்தல் அல்லது செய்யாதிருத்தல் மனித நிலையாகும். ஒரு செயலின் செய்யாமை அல்லது செய்மை அதிகரிக்க மற்றொரு வகையான செயலின் செய்மை அல்லது செய்யாமை அதிகரிக்கின்றது. அதாவது ஒரு செயலின் செய்மை அதிகரித்தால் மற்றொரு வகையான செயலின் செய்மை குறைகின்றது. இதுவும் ஹைசன்பர்கின் சமனின்மைத் தொடர்புடன் இணைந்து போகின்றது.

கருதப்படும் பொருள் வேண்டுமானால் வேறுபட்டதாக இருக்கலாம். ஆனால் அடிப்படை விளக்கங்களிலிருந்து மெய்ப்பொருள் அறிஞர் திருவள்ளுவருக்கும், அறிவியல் அறிஞர் ஹைசன்பர்கிற்கும் ஓர் ஒற்றுமையைப் பார்க்க முடிகின்றது. இன்றைய விஞ்ஞானத்திற்குப் பல ஆயிரமாண்டு களுக்கு முன்னரே ஒருவர் இதுபோன்ற, நுட்பமான, காலத்தால் மாறாத ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார் என்றால் அவருடைய தொலைநோக்குப் பார்வையை என்னென்பது!

# மதுரைக்காஞ்சியில் பொழுதுரை நிகழ்வுகள்

முனைவர் தி.நெல்லையப்பன்
அண்ணமலைப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

தமிழ் வளம் கொழிக்கும் பத்துப்பாட்டு இலக்கியச் செழிப்பில் மதுரைக்காஞ்சி அடிவரையறையால் பெரியது; தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய மன்னனுக்கு நிலையாமை அறத்தை உணர்த்துதற்கு மாங்குடி மருதனார் இயற்றியது. இந்நூல் செறிந்த பல்வேறு பண்பாட்டுத் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டது. பண்டைய தமிழர்களின் வாழ்வியற் கருவூலமாகவும் திகழ்கின்றது; சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்று சமயங்களின் தத்துவங்களையும் உள்ளடக்கியது. வரலாற்று ஒப்பனைகளும் கல்வெட்டாகியுள்ளன. அவ்வகையில் 'பொழுதுரை நிகழ்வுகள்' ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நிகழ்வுகளை நாள் நாளின் பகற்கூறு, இரவுக்கூறு எனப்பகுத்துக்காணலாம்.

## நாள்

அக இலக்கியக்கூறுபாட்டில் திணைக்குரிய முதற்பொருளில் நிலமும் பொழுதும் இடம்பெறும், பொழுதையும் ஆண்டின் பல்வேறு காலப்பகுதியைப் பெரும்பொழுது எனவும் நாளின் கூறுபாடுகளைச் சிறுபொழுது எனவும் தொல்காப்பியம் புலப்படுத்துகின்றது; மதுரைக்காஞ்சி, புறஇலக்கியவகையைச் சார்ந்தது; புறஇலக்கியங்களுக்கு முதற்பொருள், உரிப்பொருள் கருப்பொருள் வகைப்படுத்துவது இல்லை; இருந்தபோதிலும் சிறுபொழுதின் கூறாக அமைந்துள்ள நாள் பற்றிய சிந்தனை இவ்விலக்கியத்தில் பரக்கக் காணப்படுவதால் அவற்றை இனங்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கக்கூறாகும். அவ்வகையில் மதுரைக் காஞ்சியில் தொடக்க நிகழ்விலேயே அசுவினி நாள் மீன்கள் தாம் நடக்கும் நெறிப்படி நடந்தன எனவும்

பகற்பொழுதை உண்டாக்கும் கதிரவனும் இரவுப் பொழுதை ஒளிசெய்யும் திங்களும் குற்றமில்லாமல் விளங்கி நின்றன. என்பதால் நாளின் முழுமையை உணரவைக்கின்றார். அப்பாடல்,

*"வியல் நாள்மீன் நெறிஒழுக*
*பகற் செய்யும் செஞ்ஞாயிறும்*
*இரவுச் செய்யும் வெண்திங்களும்"* (மதுரைக் காஞ்சி 6-8) எனச்சுட்டியுள்ளதால் அறியமுடிகின்றது. மேலும் " நாள் ஈண்டிய நல்அகவர்க்கு," (223) என்பதால் நாட்காலையில் அரண்மனை வாயிலில் வந்து பள்ளி எழுச்சிப் பாடுவது பாணர் வழக்கம் என்பது கருத்து. ஈண்டு 'நாள்' என்ற சொல் பயன்பாட்டை மதுரைக் காஞ்சி எடுத்தாண்டுள்ளது சிந்திக்கத்தக்கது. 'நாள் தொறு எடுத்த நலம் பெறு புனைகொடி' (378) எனவும்" நாள் மகிழ் இருக்கை காண்மார் பூணொடு" (443) எனவும் "பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ" (525) எனவும் திருமாலுக்குரிய நாளான ஓணம்பண்டிகையை, "மாயோன் மேய ஓண நல் நாள்" (591) எனவும் "பேரிசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்" (618) எனவும் "நாள் தொறும் விளங்கக் கைதொழுஉப் பழிச்சி; "நாள்தர வந்த விழுக்கலம் அனைத்தும்" (693-94) எனவும் இடம்பெற்ற பாடல்கள் 'நாள்' பற்றிய சிந்தனையை உதிர்க்கின்றன எனலாம்.

## இரவும் இரவுக்கூறுகளும்

ஒரு நாளின் ஒரு பொழுது இரவு எனலாம் இரவு வருகையைப் புலப்படுத்தும் அடிகள் 'நாள் முதிர் மதியம் தோன்றிய நிலா விரிவு;' பகல் உரு உற்ற இரவு வரநயந்தோர் (548 49) என்பதாகும். 'நிலவு ஒளி வீசுவதால்' பகல் வடிவு போன்ற இராக்காலம் என மொழிந்துள்ளது அறியத்தக்கது. இரவை நல்லிரவு என்றும் இரவின் கூறுபாட்டில் முதல்யாமம், இடையாமம், கடையாமம் பற்றிய நிகழ்வுகளும் புலப்படுத்தப் பட்டுள்ளன. இரவு நேரக் கடைகளுக்கு 'அல்லங்காடி' எனச் சுட்டப்பட்டுள்ளது. யாமச் செய்திகள் மதுரைக் காஞ்சியில் (584-589) வரையுள்ள

பாடலடிகளில் காணவியலும் அதில் இரவின் முதல் யாமப்பொழுதில் இசைப்பதற்குரிய பண்ணை யாழ் இசையோடு பொருந்தி முழங்கும் மத்தளத்தின் முழக்கத்தால் மனமகிழ்வோடும் கூத்தாடியும் மணற்பரப்பில் விளையாடியும் வரைவின் மகளிர் இருப்பர் என்பதை,

*"நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும்*
*வானவ மகளிர் மான கண்டோர்*
*நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டிமகளிர்*
*யாமநல் யாழ் நாப்பண் நின்ற*
*முழவின் மகிழ்ந்தனர் ஆடி..."* (581-85)

எனச்சுட்டுவதால் அறியமுடிகின்றது. முதல் யாமம் கழிந்த செய்தியை "முந்தையாமம் சென்ற பின்றை (630)" என்பதால் அறிய முடிகின்றது."பானாள்" என்பதும் (620) முதல் யாமத்தைக் குறிக்கும் சொல்லாகும். குலமகளிர் செய்கைகள் இரவின் தொடக்கத்தில் விளக்கேற்றுதலுடன் தொடங்கி, இரவாடையுடுத்திக் கொண்டு, தம் காதலரைக் கண்டபோது புணர்ச்சி வேண்டாதவரைப் போல இருந்து, பின் புணர்ச்சியைக் கொள்வர்; யாழிசைப்பர் என்ற செய்திகளைத் தாங்கிய அடிகள்.

*"கல்லென் மாலை நீங்க நாணுக்கொல*
*ஏழ்புணர் சிறப்பின் இன்தொடைச் சீறியாழ்*
*தாம் பெயற் கனை குரல் கடுப்ப பண்ணுப் பெயர்த்து*
*வீழ்துணைதழீஇ வியல் விசும்பு கம்பு.........* (562-65)

என்பதாகும் இரவு நிறம் பெண்யானையின் நிறம்போல் இருட்டாக இருக்கும் என உரைத்துள்ளார் இதனை," இரும் பிடி மேஎந் தோல் அன்ன இருள் சேர்பு" (634) என்பதால் அறிய முடிகின்றது.

இரவின் இடையாமத்தில் உயிரினங்கள் உறங்கிய நிகழ்வுகள் சித்திரிக்கப்பட்டுள்ளன (621-631). நள்ளிரவில் பேய்களும், வருத்தும் தெய்வங்களும் எமனுக்கு உதவும் கழுது என்ற பேயும் கள்வர்களும், கள்வர்களைப் பிடிப்பதற்கு ஊர்க்காப்பாளர்களும்

ஆயுதத்துடன் திரியும் ஒற்றர்களும் நடமாடும் பொழுது நள்ளிரவுப் பொழுது என்பதைப் புலப்படுத்தும் மதுரைக் காஞ்சி அடிகள்,

"பேயும் அணங்கும் உருவு கொண்டு ஆய்கோல் – கூற்றக் கொல் தேர் கழுதொடு கொட்ப" (631-32) என்பதால் அறிய முடிகின்றது.

இரவுக் கடைகளை 'அல்லங்காடி' என அழைப்பர். பட்டினப் பாலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலும் அல்லங்காடி நிகழ்வுகளைக் காணவியலும் அல்லங்காடியில் வேறுபட்ட பல பொருள்களும் கப்பலில் வந்து இறங்கும், பிறநாட்டு வணிகர்கள் நம்நாட்டில் செய்யப்பட்ட பேரணிகலன்களை விலைக்குப் பெற்று உலவுவர்; அவர்கள் பேசும் பேச்சு பல பறவைகளின் ஓசைபோல் இருக்கும் என்கின்றார்.

இதனை,

*"வால் இதை எடுத்த வளிதருவங்கம்*
*பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து*
*ஒல்லென் இமிழ்இசைமான கல்லென*
*நனந்தலை வினைஞர் கலம் கொண்டு மறுக*
*பெருங்கடற் குட்டத்துப் புலவுத் திரை ஓதம்*

.....................................

*பல்வேறு புள்ளின் இசை எழுந்தற்றே*
*அல்லங்காடி....."* (536-44)

என்பதால் அறியமுடிகின்றது. கடவுள் மட்டுமே வழங்குவதற்கு உரியதும் மற்றவர்கள் செயலறுவதற்குக் காரணமானது இருள் என்பதை மாங்குடி மருதனார் "கடவுள் வழங்கும் கையறு கங்குலும்" (651) என்கிறார்7. இவ்வாறு அமைந்த யாமப் பொழுது கழிவதை, "அச்சம் அறியாது ஏமம் ஆகிய; மற்றை யாமம் பகல் உறக்கழிப்பி" (652,53) என்பதால் புலப்படுத்தியுள்ளார்.

பகற்பொழுதுக்கூறுகளில் விடியலை உணர்த்தும்போது, "நயந்த காதலர் கவவுப் பிணித்துஞ்சிப் புலர்ந்து விரி விடியல் எய்த விரும்பி" (663,64) என்பதால் சுட்டுகின்றார். கணவனோடு இன்பம் துய்த்த இரவுப் பொழுது, கழிந்து விடியற்காலையில் மனைவியர் செய்ய வேண்டியதைச் செய்தனர் என்பதால் புலப்படுத்தியுள்ளார்.

வைகறைப் பொழுதை இயம்பும் குறியீடு 'சேவல்' என்பதைப், "பொறிமயிர் வாரணம் வைகறை இயம்ப" (673) என்பதால் சுட்டுகிறார். இரவுக்காலம் தன்னிடத்தினின்றும் போகும் எல்லா உயிர்களுக்கும் காவலான பொழுது விடியற்காலம் என்பதையும் புலப்படுத்திய அடிகள், "இரவுத் தலைப்பெயரும் ஏம வைகறை; மைபடு பெருந்தோள் மழவர் ஓட்டி" (686,87) என்பதாகும். விடியற்காலத்தில் மன்னன் பள்ளி எழுச்சிக்காக அடிக்கப்படும் முரசு-படுகண் முரசம்என்பதை "படுகண் முரசம் காலை இயம்ப" (232) என்பதால் புலப்படுத்துகின்றார்.

பகற்பொழுதைச் சுட்டும்போது, "அகல் வானத்து வெயில் கரப்பவும்" (50) என்பதால் பகைவர்மேல் பாயும் குதிரைகளின் குளம்பு எழுப்பும் தூளி விண்ணில் வெயிலை மறைக்கும் என்று மறைக்க வியலாத சூரிய ஒளியை மறைத்ததாக உவமைநயத்தோடு கூறியுள்ளார். வெயில் கொடுமையை உணர்த்தும் அடி "கல் காயும் கடு வேனிலொடு" (106) என்பதாகும். மலைகள் காய்வதற்குக் காரணம் முதுவேனில் எனச் சுட்டுகிறார். மேலும் வெயில் தன்மையை "வெயிற் கதிர் மழுங்கிய படர் கூர் ஞாயிற்றுச் செக்கர் அன்ன சிவந்து நுணங்கு உருவின்" (431,32) என்பதாலும் "தெண்திரை அவிர் அறல் கடுப்ப ஒண் பகல் குறியவும் நெடியவும் மடிதரூஉ விரிந்து" (519,20) என்பதாலும் பகல் பற்றிய செய்தியை அறியமுகின்றது.

பகற்பொழுதை அடுத்துவரும் மாலையும் அந்தியும்கூட கருத்துச்செறிவுடன் இலங்குகின்றன. மாலை, இரவும் எல்லையும்

விளிவு இடன் அறியாது" (239) என்பதால் இரவு முடியும் விடியற்காலமும் பகல்முடியும் மாலையும் என்று புலப்படுத்தியுள்ளார். அந்திப்பொழுதில் மாயோன் முருகன் முதலிய இறைவர்க்கு அரிய முறையில் பலியிடும் நிகழ்வுக்குரிய பொழுதில் இன்னிசைக்கருவிகள் முழங்கின என்றும் அமைந்த அடி "அந்தி விழவில் துரியம் கறங்க" (460) என்பதாகும்.

நாளங்காடி பகற்பொழுதின் முழுத்தன்மையையும் கொண்டதாகும். நாளங்காடியில் பல்வேறு பண்டங்களும் பண்டமாற்று விற்பனையும் நடைபெற்றன. அங்கு எழுந்த ஆரவாரம் மிக்க ஓசையுடையது, இதனை, "கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி" (427) என்பதால் உணர்த்தியுள்ளார். "நாள் அங்காடி நனந்தலைக் கம்பலை" (430) என்பதாலும் புலப்படுத்தியுள்ளார்.

முக்கால நிகழ்வுகள் குறித்த செய்தியும் இடம் பெற்றுப் பொழுதுரை நிகழ்வுக்குக் கட்டியம் உரைக்கின்றது. "இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு தன்குணர்ந்து" (478) என்பதால் நிகழ்காலமும் "சென்றகாலமும் வரூஉம் அமயமும்" (477) என்பதால் இறந்த, எதிர்காலங்களும் மொழியப் பெற்றுள்ளன என்பதும் அறியத்தக்கதாகும். மேற்கே கதிரவன் மறையும் செய்தியைச் "சுடர் பொழிந்து ஏறிய விளங்குகதிர் ஞாயிற்று" "இலங்கு கதிர் இளவெயில் தோன்றியன்ன" (702-703) என்பதால் புலப்படுத்தியுள்ளார்.

## தொகுப்புரை

நாள் நாள்கூறுகளின் நிகழ்வுப்பொழுதாகும். அப்பொழுதுகள் இலக்கியத்தில் இடம்பெற்று இலக்கிய ஆக்கத்திற்கு வனப்பையும் வடிவையும் அளிப்பன எனலாம். பொழுதுரை நிகழ்வுகள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நினைவுகூர்வதாகும். சுற்றுச்சூழலியல் நிகழ்வுகளிலும் பொழுதுரை நிகழ்வுகளை இன்றும் இணைத்துப்பார்க்கலாம்.

# திராவிடமொழி ஆராய்ச்சியும் முறையும்

*டாக்டர் திரு.கமில்சுவேலபில்*

பெரியோர்களே, அன்பர்களே!

"கற்றாரைக் காண்பதுவும் நன்று; கற்றார் சொல் கேட்பதுவும் நன்று; கற்றாரோடு இணங்கி இருப்பதுவும் நன்று" என்பர் நற்றமிழ் வல்லார். அந்த நலத்தை இன்றைக்கு எனக்குச் சிறப்பாகத் தந்த அன்பர்களை மனமாரப் போற்றுகின்றேன்.

தமிழ் மொழியிலும், மொழியின் வரலாற்றிலும் ஆராய்ச்சி பண்ணுவதற்குத் தமிழகத்திற்கு வந்த என்னை அன்போடு பாராட்டினீர்கள். அதற்கு எனது மனமார்ந்த நன்றி உரியது. இந்தப் பெரிய சிறப்பிற்கு நான் உரியவன் அல்லன்.

இந்தச் சிறந்த தமிழ்ச்சங்கம் கற்றோர் சங்கம்; புலவர் சங்கம், ஆகையால் நான் இன்று இங்குத் திராவிட ஒப்பிலக்கணத்தின் ஆராய்ச்சியைப் பற்றியும் குறிப்பாகத் தமிழ் மொழியின் ஆராய்ச்சியைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன்.

திராவிட மொழி ஆராய்ச்சி பற்றிய பொதுவான போக்கும் நோக்கும் நமக்குத் தெரிந்தவையே.

கீழைநாட்டுமொழி வரலாற்றில், ஏனைய மொழிகளை நோக்கத் திராவிட மொழிகள் பற்றிய அறிவும், ஆராய்ச்சியும் இன்றும் வளர்ச்சி பெறாத நிலையிலேயே உள்ளன எனக் கருதுவர் லீடனைச் சார்ந்த பேராசிரியர் கியூப்பர் என்பவர். எனினும், திராவிட மொழி ஆராய்ச்சித் துறை தனக்கென ஒரு சிறு வரலாற்றைப் பெற்றுத் திகழும் அளவுக்காவது இன்று முன்னேறியுளது எனல் பொருந்தும். இவ்வரலாறு அதன் சென்ற கால நிலையை நமக்கு உணர்த்துவதோடு எதிர்கால வளர்ச்சிக்குரிய சிந்தனையைத் தூண்டவும் உதவுகிறது.

இந்தியாவின் பண்டைய வரலாறு கற்பனை வளத்தால் கட்டப்பட்டது. அதனாலேயே இந்தியாவின் பொது பண்பாட்டு வளர்ச்சியில் ஆரியத்தின் செல்வாக்கு அதிகம் என்ற தவறான கருத்து நிலவியது. அது இன்று மறைந்து, ஆரியர்களின் வருகைக்கு முன்னர். இந்தியாவில் வாழ்ந்த பல்வேறு பழங்குடி மக்களின் பண்பாட்டுச் சாதனைகளை உள்ளவாறு அறியும் உயரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக இந்திய ஐரோப்பியருக்கும், ஆரியருக்கும் முற்பட்ட இந்தியப் பெருங்குடி மக்களுக்கும் இடையே நிலவிய தொடர்பு குறித்து ஒரு புதிய கண்ணோட்டம் உருவாகி இருப்பது புலனாகும். ஆரிய இனம் நாகரிகமும் பெருமையும் நன்கு அமைந்த இனம் என்ற கருத்து மறைந்ததோடன்றி, அவ்வினம் ஆதியில் நாகரிகமற்ற நாடோடிக் கூட்டமாக இருந்தது என்பதும், இந்நாட்டில் பழங்காலம் முதல் வேரூன்றி இருந்த பண்பாட்டைச் சிதைத்து, அப்பழங்குடிகளோடு இரண்டறக் கலந்துவிட்டது என்பதும் இன்று நாம் படிப்படியாகப் பெற்றுள்ள புதிய முடிவுகளாகும். ஆயினும், ஆரியர்கள் தாங்கள் இந்தியாவிற்கு வரும்போது கட்டுப்பாட்டோடு கூடிய சமூக அமைப்பு முறையும், மன எழுச்சியும் பெற்றிருந்ததோடு நல்ல வளமான மொழியும் அவர்களுக்கு அமைந்திருந்தது என்பது நினைவு கூரத்தகும். இந்திய வரலாற்றில் அவர்தம் மொழி சீரிய இடம்பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் இன்று மொழிவளர்ச்சி குறித்துப் புதியதொரு கருத்துச் சூழல் உருவாகியுள்ளது.

வேதகாலம் முதலே இந்திய - ஆரிய மொழிக் குடும்பத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பிறமொழிகள், சிறப்பாகத் திராவிட மொழிகள் பெரிதும் உதவியிருக்கின்றன என்பது வெளிப்படை. அங்ஙனமே இந்தியச் சமுதாய அமைப்பு பண்பாடு, சமயம் ஆகிய துறைகளிலும் திராவிடக் கூறுபாடுகள் மிகப் பலவாகக் காணப்படுகின்றன என்பதை நான் நன்கு வலியுறுத்த விரும்புகின்றேன். இன்றைய இந்திய நாகரிகம்

என்பது பல்வேறு இனங்கள், மொழிகள், வாழ்க்கைமுறைகள் ஆகியவற்றால் மிடையப்பட்ட ஒரு கதம்பமாலை போல்வதாகும்.

இவ்வாறு நமது கருத்திலும் கண்ணோட்டத்திலும் ஏற்பட்ட சில பல மாறுபாடுகளால், திராவிட ஒப்பிலக்கணத் துறையில் சென்ற இருபது ஆண்டுகளாகச் சில இன்றியமையாத முடிவுகள் செய்யப்பட்டுள்ளன. இன்றும் அனைத்திந்திய ஒருமைப்பாட்டு வளர்ச்சிமுறை பற்றிய அறிஞரிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இந்திய வரலாறு தொடங்கியது முதலே இவ்வொருமை உணர்ச்சி இந்நாட்டில் நிலவி வந்துள்ளது என்பது பேராசிரியர் டாக்டர் சுனிதிகுமார் சாட்டர்ஜி போன்ற அறிஞர் சிலரது கருத்து. வேறு சில அறிஞர்கள் இக்கருத்தினை மறுத்து இவ்வொருமை உணர்ச்சி பல்வேறு காலப்பகுதிகளில், ஒன்றுக்கொன்று மாறுபட்ட பல்வேறு உணர்ச்சிக் கூறுபாடுகளின் கூட்டுறவால் உருவாகியது என்பர். எடுத்துக்காட்டாக, பழங்கால முதலே சிறந்து விளங்கும் பல்லாயிரக்கணக்கான பைந்தமிழ்ச் செய்யுட்கள் - சங்ககாலத் தனிநிலைச் செய்யுட்கள் - எல்லாம் வடமொழி புராண இதிகாசங்கட்கு முற்றிலும் மாறுபட்ட தூய தனித் தமிழ்ச் செல்வங்களாகும். நாம் இன்று அனைத்திந்தியப் பண்பாட்டு ஒருமைப்பாடு என்று கூறுவதெல்லாம் மேற்கூறிய தமிழ்ப்பண்பும் கலந்ததொன்றே. இங்கு நான் கூறியது திராவிட ஒப்பியல் மொழி ஆராய்ச்சிக்குரியது அன்றெனினும் இஃது ஒரு வரலாற்றுத் தொடர்புடைய பெரும் சிக்கலாகும். ஆகவே இது குறித்துச் சில பேச எண்ணுகிறேன்.

நான் இன்று மிகவும் வலியுறுத்த விரும்புவது இதுதான். ஆரியம் உயர்ந்தது என்ற விரும்பத்தகாத மனக்கோட்டத்தின் காரணமாக ஒருவகை எதிர்ப்பு உணர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இஃது இயல்பு. இதன் விளைவே இன்றைய திராவிட இயக்கம். ஆரியரது உயர்வு மனப்பான்மையை எதிர்த்துத் தடுக்கமுடியாதவாறு எழுச்சிபெற்றுவரும் எதிர் விளைவாகும் இது. அன்றியும் இது திராவிடத்தின் பழைமையை அறிந்து

பாராட்டும் ஒருவகைத் தேசியமும் ஆகும். ஆனால், இந்தப் போக்கும் ஆரியப்போக்கினைப் போலவே உண்மை ஆராய்ச்சிக்கு உதவாததோடு ஊறு விளைப்பதும் ஆகும். உலகிலேயே தமிழ் மொழிதான் மிகப் பழைமையான மொழி என்பதும், தலைச் சங்கத்தின் வரலாறு எண்ணாயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்தது என்பதும், இங்கிலாந்து ஒரு காலத்தில் சைவத் திருநெறியைத் தழுவி இருந்தது என்பதும் பொருந்தாக் கூற்றுக்கள் என உணர்க, அவை யாவும் அறிவியல் வரம்புக்கு அப்பாற்பட்டவை. அவ்வாறு கூறுவதுதமிழரது உண்மைப் பெருமைக்கே உலை வைப்பதாகும். உண்மைகளை நாடுவதே அறிவியல். காய்தலும் உவத்தலும் இன்றி எல்லாத் துறைகளிலும் கிடைக்கும் சான்றுகளும் சாதனங்களும் அறிவியல் ஆராய்ச்சிக்குத் தேவை. இன்று மொழி நூல் துறையும், ஒப்பிலக்கணத் துறையும் அறிவியலின் இடத்தைப் பெறும் அளவுக்கு முன்னேறியுள்ளன. இஃது ஒரு நல்ல அறிகுறி, அறிவியல் ஆராய்ச்சி அரசியல் மேதைகளின் ஆணைகளுக்கு அடங்காது, அஃது உண்மை காணவே முயலும், வள்ளுவனாரும்,

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

என்றே அருளினர். ஆராய்ச்சிக்கு ஒவ்வொரு சிறு அம்சமும் உதவி செய்யும். முதலில் ஒரு பொருள் பயன் இல்லாததுபோல் தோன்றினாலும் இறுதியில் நன்மைதரக்கூடியதாக அமையலாம். அதனாலும் உண்மை காண்டல் வேண்டும். வள்ளுவனாரும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று அருளினார்.

மேனாடுகளில் மொழி இயல் பற்றி இரண்டு முக்கிய பிரிவுகள் தோன்றி வளர்ந்துள்ளன. அவற்றுள் ஒன்று பழமையான ஐரோப்பிய முறை; மற்றொன்று அமெரிக்கமுறை, முன்னையது வரலாறு தழுவிய ஒப்பீட்டு மொழியியல்; பின்னையது புனைவொடு

புணர்ந்த பகுப்பு நிலையியல். மொழிநூல் ஆராய்ச்சித்துறையில் நல்ல பயன் ஏற்பட வேண்டுமானால் இவ்விரு முறைகளும் ஒருங்கே கடைப்பிடிக்கப்படல் வேண்டும். ஒரு பொருளின் உண்மை ஆராய்ச்சிக்கு 'என்ன ,ஏன்' என்ற இரு கேள்விகளைக் கேட்க வேண்டும், இவ்விரண்டனுள்ளும் 'ஏன்' என்பதுதான் மிக முக்கியமானது. அங்குதான் அறிவியல் ஆரம்பமாகிறது. ஒரு பொருளின் உண்மையை ஆராய்ந்து அறிதற்கு அதுபற்றிய பல்வேறு செய்திகளையும் திரட்டியபின் அவற்றை வகுத்தும், விளக்கியும் முறைப்படுத்தல் வேண்டும். அவ்வாறு முறைப்படுத்துங்கால் நம்மை அறியாமலே 'என்ன, ஏன்' என்ற வினாக்கள் எழும். அங்ஙனம் எழுதல் இயல்பும் அறமும் ஆகும்.

கீழை நாடுகளில் மற்றொரு முறை வழக்கிலுள்ளது. மூலங்களையும் அவற்றின் உரைகளையும் படித்துப் பாராட்டி மகிழும் பழமையான முறை அது. அதற்கு மிகப்பரந்த அறிவு வேண்டும். அஃது இன்றும் பெருவழக்கில் உள்ளது. அம்முறையை ஆளுதற்கு வேண்டும் பரந்த அறிவாற்றலும் சிறந்த நினைவாற்றலும் மேனாட்டு ஆராய்ச்சியாளர்க்கு எளிதில் அமைவதில்லை; அமையப்போவதும் இல்லை. இந்நிலையில் நீங்கள் செய்ய வேண்டுவது இவ்விரு முறைகளையும் இணைத்து ஆராய்தலே ஆகும்.

இனித் தமிழ்மொழி பற்றிய ஒரு சில செய்திகளை அறிவோம். கன்னட அறிஞரும், மலையாள வல்லுநரும் மொழி ஆராய்ச்சித்துறையில் நன்கு உழைத்து, திட்பமும் நுட்பமும் செறிந்து நூல்களை வெளியிட்டுள்ளனர். அவர்களுள் திரு.ஏ.என்.நரசிம்மையா, டாக்டர் திரு.சந்திரசேகர், டாக்டர் திரு.ஜார்ஜ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். திருத்தம் பெறாத திராவிடப் பேச்சு மொழிகளைப் பொறுத்தமட்டில் கொலாமி, பார்கி, ஒலாரி, கோடா ஆகிய மொழிகளைப்பற்றி எமினா, பர்ரோ, பட்டாச்சாரியார் முதலிய அறிஞர் பெருமக்கள் சிறந்த விளக்கக் குறிப்புக்கள் வரைந்துள்ளனர். ஆனால், இவர்களது தொண்டு

இன்றைய தேவையின் ஒரு பகுதியையே நிறைவேற்றுவதாகும். துலுக்கு, கொடகு, படகா, கோண்டு, தமிழ் ஆகிய மொழிகளைப் பற்றிச் சிறந்த மொழி நூல் விளக்கக் குறிப்புகள் மிக மிகத் தேவை. உண்மை கூறுமிடத்து, தமிழ்மொழியின் பழைய இலக்கணப் பேராசிரியர்களைத் தவிர, இன்றைய நிலைக்குப் பொருத்தமான தமிழ் இலக்கண நூலாசிரியர்கள் தோன்றவில்லை. இக்கால மொழியாராய்ச்சிக்குப் பயன்படும் முறையில் இதுவரை எத்தகைய தமிழ் இலக்கண நூலும் தோன்றவில்லை. இந்த அவல நிலையை நோக்கினால் தமிழ் அறிஞர் ஆற்றவேண்டிய பணி மிகப்பெரிது என்பது புலனாகும். ஆனால் இத்துறையில் நம்பிக்கை இழக்க வேண்டுவதில்லை. இத்துறையில் நல்ல குறிக்கோளும் மனத்திட்பமும் கொண்டு நல்ல முறையில் உழைப்போமானால் நல்ல பயன் விளையும். இதற்குரிய சில வழிமுறைகளைக் கீழே தருகிறேன்.

1. ஒவ்வொரு காலகட்டத்திலும் மொழியின் வளர்ச்சி முறை பற்றிய விளக்க வரலாறுகளை வெளிப்படுத்தல் வேண்டும். இவ்விளக்க வரலாறுகள் நன்கு சோதித்து வெளியிடப்பட்ட மூலங்களின் அடிப்படையில் அமைதல் வேண்டும், இம்முறையில் இன்னாநாற்பது, இனியவைநாற்பது என்ற இரு நூல்களைப்பற்றியும் நான் ஆராய்ந்துள்ளேன். இவற்றுள் இன்னாநற்பது ஓராண்டுக்கு முன்னரே என்னால் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இனியவை நாற்பதும் வெளியிடப்படும்.

2. இந்த முறையில் பணியாற்றத் தொடங்கினால்தான் முறையான வரலாறு தழுவிய இலக்கண நுல்களைத் தமிழில் இக்காலத்தேவைக்கேற்ப படைக்கமுடியும். இப்பணி மிகவும் அருமையுடையதுதான். ஆனால் தனிப்பட்டவர்களால் தீர்க்கமுடியாத எந்தவொரு சிக்கலும் ஒரு குழுவால் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்பதை இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன். அன்றியும் அனைத்துலக அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் இணைந்து நின்று அறிவுப்

பணிபுரியும் காலம் இப்பொழுது வாய்த்துள்ளது என எண்ணுகின்றேன். திராவிட மொழி ஆராயச்சிக்கென்றே ஓர் அனைத்துலக ஆராய்ச்சி இதழ் வெளியிடுதல் நலம் பயப்பதாகும். காலப்போக்கில் உலக ஆராய்ச்சி அறிஞர் பலரும் ஒன்றுகூடித் திராவிடமொழி நூல்பற்றி விவாதித்து விளக்கம் அடையும் வாய்ப்பும் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

மேலும், தமிழ்மொழிவளர்ச்சி பற்றிய வரலாற்றினை நாம் வாழும் இக்காலம் வரை அறிதல் வேண்டும். தமிழ்நாட்டின் பட்டிதொட்டிகளில் உள்ள பாமரமக்களால் பேசப்படும் பல்வேறுபட்ட பேச்சுமொழிகளையும் ஆராய்தல் வேண்டும். அவற்றை இலக்கியமொழிகள் அல்லவென்றும், செப்பம் பெறாதவை என்றும் புறக்கணிப்போமானால், அதனால் ஏற்படும் இழப்புக்கள் மிகப்பலவாகும். ஆனால் அஃது ஒரு தனி ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்ததாகும். ஆகவே அதுபற்றி இன்னொரு வாய்ப்புக்கிடைக்கும்போது பேசுகின்றேன். வணக்கம்.

## தமிழ்த் தெய்வத்தின் கோயில்

### திருநெல்வேலிப் பிரயாணம்

மேலை வீதியில் உள்ள கவிராஜ ஈசுவர மூர்த்திப் பிள்ளை வீட்டில் புத்தக அறை இருந்தது. அதுதான் அவர்கள் பரம்பரை வீடு. புத்தக அறையைத் திறந்து காட்டினார்கள். பார்த்தவுடன் என் உடம்பு சிலிர்த்தது. 'தமிழ்ச் சங்கத்தில் முன்பு இப்படித்தான் சுவடிகளை வைத்திருந்தார்களோ?' என்று விம்மிதமடைந்தேன். ஏட்டுச்சுவடிகளை அடுக்கடுக்காவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள். சுவடிகளைக்கட்டி வைத்திருந்த முறையே திருத்தமாக இருந்தது. புழுதி இல்லை; பூச்சி இல்லை; ஏடுகள் ஒன்றோடொன்று கலக்கவில்லை. 'தமிழ்த் தெய்வத்தின் கோயிலென்றுசொல்லும்படி இருந்தது அவ்விடம்.'

*உ.வே.சா. என் சரித்திரம்.*

# தமிழ்மயக் கோட்பாட்டின் வளர்ச்சி வரலாறு

*முனைவர். அரசக்கண்ணன்*

'வடசொற்கிளவி' எனத் தொடங்கும் நூற்பாவழி, வடமொழிச் சொற்களை ஏற்கும் விதம் பற்றிய விதியைத் தொல்காப்பியர் தொடங்கி வைத்தார். வடமொழிச் சொல்லை எழுத நேர்ந்தால் வடமொழி எழுத்தை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்தால் எழுதுக என்பதே அவ்விதி.

சொற்களை வகைப்படுத்திய தொல்காப்பியர் வடசொல் எனவும் தனியே கூறினார். வடமொழிச் சொற்கள் தொல்காப்பியத்திலும் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு இடம் பெற்றுள்ள வடமொழிச்சொற்களை அவர் விதித்த விதிப்படியே வடமொழி எழுத்தை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்தால் அமைத்துப்பயன்படுத்தியுள்ளார்.

இவ்வாறு வடமொழிச் சொற்களை எழுத விதிகண்டும் அவ்விதிப்படி வடமொழிச் சொற்களை பயன்படுத்தியும் தொல்காப்பியர் உருவாக்கிய கோட்பாடு என்பது தமிழ்மயக்கோட்பாடாகும்.

வடசொற்கிளவி எனத்தொடங்கும் விதிக்குச் சேனாவரையர் எடுத்துக்காட்டும் மேரு முதலான சொற்கள் தமிழ் எழுத்தால் எழுதப்பட்ட வடமொழிச்சொற்களே

வடசொல்லுக்கு விளக்கமளித்து வடசொற்கிளவி என்ற தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள்காட்டி எடுத்துக்காட்டுகள் கூறும் இலக்கண விளக்க உரையாசிரியர் வாரி மேரு குங்குமம் எனத்தொடங்கி திலகம் நாமம் கோபம் அமலம் சூத்திரம் விருத்தி எனப்பல சொற்களை சேனாவரையர் தொகுத்தவாறு தானும் தொகுத்துக் காட்டுவார் இவ்வாறு தமிழ் எழுத்தால் தொகுக்கப்பட்ட சொற்கள் பெரும்பாலும் வடமொழிச் சொற்களே இத்தொகுப்பில் தமிழ்ச் சொற்களும் உள.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய வீரசோழீயம்

இன்ன வடவொலி இன்ன தமிழொலியாக வரல் வேண்டும் என்ற விதியை வகுத்துத் தந்தது வடமொழிச் சொற்களுக்கு மட்டுமின்றி வேறு தேயச் சொற்களுக்கும் இவ்விதி பொருந்தும் எனக் கூறி இவ்விதியை மேலும் விரிவுபடுத்தியது இதனால் வேறு தேயச் சொற்களும் தமிழ் வடிவுபெறலாயின.

இயைவனவடசொல் எனமுடியும் நூற்பா நன்னூலில் இடம்பெறுவதோடு இலக்கணமுறைப்படி தற்சமம், தற்பவம் என இரு வகையாக விளக்கப்படுகிறது. அமலம், காரணம், குங்குமம் தற்சமயம் என்பதற்கும் சுகி, போகி என்பன தற்பவம் என்பதற்கும் உரையாசிரியர் எடுத்துக்காட்டுவார்.

தற்சமம் தற்பவம் எனப்பெயர்கள் பெற்றாலும் இரு பிரிவிலும் இடம் பெற்ற சொற்கள் தமிழ் எழுத்தால் அமைந்தவடமொழிச் சொற்களே நன்னூலார் போலவே பிரயோக விவேக நூலாசிரியரும் திங்கட் பெயர்களையும் நாட்பெயர்களையும் தற்பவமாகக்கூறுவார்.

வடமொழியில் நகரம் எதிர்மறைப்பொருள் தரும் மெய் தொடர்ந்தால் மெய்கெட்டு அகரமாகும். உயிர்தொடர்ந்தால் மெய் உயிர்மேல் ஏறியும் வரும் ந+நாதன்=அநாதன், ந+உசிதன் = அநுசிதன் என்பன காட்டுகளாம். இவ்வாறு எதிர்மறைப் பொருள்தருமாறு இலக்கணம் கூறப்பட்டு அமைவனவும் தமிழ் எழுத்தால் அமையப்பெற்ற வடமொழிச் சொற்களே!

வடமொழிச் சொற்கள் தமிழில் புணரும்போது ஏற்படும் மாறுதல்களைச்சந்தி இலக்கணத்தான் விவரிக்கப்படும். இன்னின்ன எழுத்துக்களுக்கு இன்னின்ன எழுத்துக்கள் வரும் எனவும் கூறப்படும். சந்தி குணம், விருத்தி என இருவகையாகவும், தீர்க்கசந்தியையும் சேர்த்து மூவகையாகவும் விளக்கப்படும்.

சேநாஅதிபதி = சேநாதிபதி(தீர்க்கசந்தி), புத் = போதம்(குணம்), தசரதன்பிள்ளை = தாசரதி (விருத்தி) என வரும். எனினும் அவை தமிழ் எழுத்தால் அமைந்த வடமொழிச் சொற்களே!

இவ்வாறு பிறமொழிச் சொற்கள் தமிழ்மயமாக்கப்படும் பொழுது, சில ஒலிகள் தமிழில் இணைந்துவாரா. ஆதலின் உயிரொலிகள் சேர்ந்து, மொழிமுதல், மொழியிடை கடை நிலைகளில் தமிழ்ச்சொல் வடிவு பெறல் வேண்டும் என்பர். ஒலி மாற்றமும் தமிழ்ச்சொல்லமைப்புக்கு ஒத்திருக்க வேண்டும் எனவும் கூறுவர். இவ்வாறு பிறமொழிச் சொற்கள் அமையும் விதங்கண்டு 'ஒலிபெயர்ப்பு' என்றும் இதனைக் குறிப்பிடுவர்.

மொழியின் அமைப்பு என்பது காலந்தோறும் மாறுபடக் கூடியது. அதுபோல் தமிழ்மொழியாக்கமும் மாறுபட்டு, புதிய வரவுகளுக்கேற்ப வளர்ந்து, தமிழ்மயக் கோட்பாடாய் மொழியியல் வரலாற்று வளர்ச்சியில் நெடுங்காலமாக இடம் பெற்றுள்ளது.

## தனித் தமிழ்க் கோட்பாட்டின் வளர்ச்சி வரலாறு

இலக்கணநூல்களில் வீரசோழியமே செய்யுட்களில் வடசொல் வரலாகாது என்று முதன்முதலில் கூறியுள்ளது. வடசொல் வருமேல் அதைப்பழித்த உறுப்பெனவும் வீரசோழியர் பழிப்பார். மறைமலையடிகள் இவ்வுண்மையை 1916இல் தம்பட்டறிவால் உணர்ந்து தனித்தமிழில் செய்யுட்கள் இருத்தல் வேண்டும் எனக் கூறுவார். "ஒரு தமிழ்ச்செய்யுள் எந்த அளவு இலக்கியநயம் உடையது என்பது பிறமொழிபோல் எந்த அளவு வடமொழிச் சொற்களையுடையது என்பதைப் பொறுத்திராமல் எந்த அளவு வடமொழி ஆட்சியிலிருந்து விடுபட்டுள்ளது என்பதையே பொறுத்துள்ளது" என்று கால்டுவெல் தம் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலில் கூறுவார்.

இலக்கியங்களில் அயன்மொழிச் சொற்கள் தமிழ் எழுத்துக்களாலும், தமிழ் ஒலியமைப்பாலும் எழுதும் முறையினைத் தவிர்த்து, அயன்மொழிச் சொற்கள் மொழிபெயர்க்கப்பட்டும், பெயர்ச்சொற்கள் தமிழாக்கம் பெற்றும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

கிரௌஞ்சம் (பரி.9) என்பதை 'குருகுபெயர் பெற்றமால் வரை' என்றும், சமாதி (பரி 5: 37) என்பதை 'நொசிப்பு' என்றும்,

வாசுதேவன் என்ற பெயரை 'செங்கட்காரி' என்றும், சங்கருடணன் என்பதை 'கருங்கண்வெள்ளை' என்றும், பிரத்யும்நன் என்பதை 'பொன்கண்பச்சை' என்றும், அநிருத்தன் என்ற பெயரை 'பைங்கண்மால்' என்றும், பிரமன் என்ற பெயரை 'வாய்மொழிமகன்' (பரி.3) என்றும் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

'ரத்தாக்சன்' என்ற வடமொழிப் பெயரைத் தமிழ்மயமாக்காமல் 'குருதியின் கண்ணன்' என்றும், ஸ்வர்ணவர்ணனை சுவணவண்ணன் என்றும் கனக மேனி என்றும் பெயர்களின் பொருளை மொழிபெயர்த்துத் தனித்தமிழாகக் கம்பர் பயன்படுத்துவார்.

தேம்பாவணி நூலியற்றிய 'கான்ஸ்டன்டின் ஜோசப்பெஸ்கி' தன்பெயரை வீரமாமுனிவர் எனத் தமிழாக்கிக் கொண்டார். அதோடு இந்நூல் பாத்திரப் பெயர்களையும் தமிழாக்கினார். 'ஜோஸப்' என்ற பெயரின் பொருளை மொழிபெயர்த்து 'வளன்' என வழங்குவார். பல பாத்திரங்களின் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களாக மாற்றினார். ஜான் கருணையன் ஆகிறார். ஐஸக் நகுலன் ஆகிறார். ஒருவர் சிவன் எனப்படுகிறார்.

"மொழிபெயர்க்கக்கூடாத இயற்பெயர்களையும், சிறப்புப் பெயர்களையும் ஒலி பெயர்த்தல் வேண்டும்" எனப் பாவாணர் கூறுவாராயினும் இவ்வாறு பிறமொழிப்பெயர்களை மொழி பெயர்த்தும், பெயர்ச்சொற்களைத் தமிழாக்கம் செய்தும், அயன் மொழிப் பெயர்களை நீக்கித் தமிழ்ப் பெயர்வைத்தும் தனித் தமிழ் கண்டனர்.

பாம்பன் சுவாமிகள் வடசொல் கலவாத 'சேந்தன் செந்தமிழ்' நூலை எழுதினார். அதற்குரிய உரையும் தனித்தமிழில் எழுதப்பட்டது. மேலும் சேந்தன் செந்தமிழ் புலன்வனப்பு என்னும் வடசொல் தமிழ் அகரமுதலியும் எழுதப்பட்டது.

யானை, வல்லி முதலான சொற்கள் தமிழ்மயமாக்கப் பெற்ற வடமொழிச் சொற்களெனக் கூறப்பட்டதால், அச்சொற்களை பாம்பன் சுவாமிகள் விலக்கி, தெய்வயானை என்ற சொல்லை

"கடவுட்பிடி" எனவும், வல்லி (வள்ளி) என்ற சொல்லை "கொடிச்சி" எனவும் வழங்குவார். குஹன் என்ற சொல்லை "உள்ளிடத்தான்" "கடவுள்" எனவும் மொழிபெயர்த்துத் தனித்தமிழ்ச் சொற்களாகப் பயன்படுத்துவார்.

விருதை சிவஞான யோகிகள் தோற்றுவித்த 'திருவிடர் கழகம்' என்ற அமைப்பு, கழகத்தின் நோக்கம், குறிப்பு, கட்டளைகள் அனைத்திலும் தனித்தமிழையே மேற்கொண்டுள்ளது.

சுவாமிநாதன் என்ற வடமொழிப் பெயரை நீக்கித் தன்பெயரை 'அண்ணல் தங்கோ' எனத் தமிழ்ப்பெயராகக் கொண்டார். வடமொழிப் பெயர்கொண்ட தமிழறிஞர்பலருக்கும் தமிழ்ப்பெயர்களே வழங்கிவந்தார். 'ஆகாசவாணி' என்ற தமிழ்மயங்கொண்ட வடமொழிப்பெயர் நீங்கி 'வானொலி' எனப் பெயர் சூட்டப்பெறல் வேண்டும் எனப்போராடினார்.

செந்தமிழ் என்பது தனித்தமிழே. பிறமொழிச் சொற்கள் வந்து கலந்தாலும், தனித்தமிழாகச் செந்தமிழ் சங்க காலந்தொட்டு இன்றுவரை, மொழிபெயர்க்கப்பட்டும், பெயர்ச் சொற்கள் தமிழாக்கம் செய்யப்பெற்றும், அயன்மொழிப்பெயர்கள் நீக்கப்பட்டுத் தமிழ்ப்பெயர்வைத்தும் வளர்க்கப்பட்டுள்ளது என்பது மொழியியல் வரலாற்று வளர்ச்சியில் தனித்துக் காட்டத்தக்கது.

## தமிழ்மயக்கோட்பாடும் தனித்தமிழ்க் கோட்பாடும்

### தமிழ்மயக் கோட்பாடு

"தமிழ்ச் சொற்கள் படைக்கமுயன்றும் முடியாத நிலையில் பிறமொழிச் சொற்களைத் தமிழியல்புக்கேற்ப மாற்றி வழங்கவேண்டும்" என மறைமலையடிகள் குறிப்பிடுவார்.

"எவ்வளவு முயன்றும் ஏற்ற சொற்கள் வாய்க்கா நிலையில் தமிழ்மயப்படுத்திப் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளலாம்" என்று 'தமிழியக்கத்தந்தை' இரா.இளவரசு 'தனித்தமிழியக்கம்' என்ற நூலில் 'தமிழே நலந்தானே' என்ற தலைப்பிலான முன்னுரையில் குறிப்பிடுவார்.

இவ்வாறு அரிதின் முயன்றும் முடியாத நிலையில் மட்டுமே பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தும் முறையாகத் தமிழ்மயக்கோட்பாட்டைக்கொள்ள வேண்டும் என்றனர்.

ஆனால் தமிழ்ச்சொற்கள் எளிதாகப் பயன்படுத்துமாறு கிடைக்கப்பெற்றும், தமிழ்ச்சொற்கள் புறந்தள்ளப்பட்டு வடமொழிச் சொற்களே தமிழ் எழுத்தால் எழுதப்பெற்று பயன்படுத்தப்பட்டு வந்தமையை இவண்காணலாம்.

'வடசொற்கிளவி' எனத் தொடங்கும் நூற்பா மூலம் தமிழ் மயக்கோட்பாட்டை உலகுக்கு அளித்த தொல்காப்பியரே அவ்விதிப்படி வடமொழிச் சொற்களைத் தமிழ்மைப்படுத்தித் தம் நூலிலும் பயன்படுத்தியுள்ளார். தமிழ்ச்சொற்கள் இல்லாத நிலையில், ஆக்கிக்கொள்ள முடியாத நிலையில் அவர் பயன்படுத்தினார் என்பதற்கில்லை. அவர் பயன்படுத்திய வடசொற்களுக்கு நேர் தமிழ்ச்சொற்கள் உள. வடமொழிச் சொற்கள் ஒலி பெயர்த்துத்தான் தமிழில் வழங்கவேண்டும் என்ற நிலையில் அல்லது ஏற்ற சொற்கள் வாய்க்கா நிலையில் அவர் பயன்படுத்திய எச்சொல்லும் இல்லை.

இதனால் வடமொழிச் சொற்களின் வரவுக்குப் புதியவாயில் திறக்கப்பட்டது. தமிழ்ச்சொற்கள் இடம்பெற வேண்டிய இடங்களில் வடசொற்கள் முக மூடியணிந்து நிலைபெறலாயின. 'வடசொற்கிளவி' எனத் தொடங்கும் நூற்பாவுக்கு உரையெழுதிய சேனாவரையரும், இலக்கணவிளக்க உரையாசிரியரும் எடுத்துக்காட்டும் சொற்கள் தமிழ் எழுத்தால் அமைந்த வடசொற்களே!

இன்ன வடவெழுத்து இன்ன தமிழ் எழுத்தாக வரும் எனப் புதுவிதி புகுத்திய வீசோழியம், இவ்விதியை வேறுதேயச் சொற்களுக்கும் பொருந்தும் எனக்கூறி, அயன்மொழிச் சொற்கள் அனைத்திற்கும் நல்வரவு நல்கியதால் பிறமொழிச் சொல்புகும் வாயில் பெரிதானது. இதனால் வடமொழிச்சொற்களேயன்றி, வேறு பிறமொழிச் சொற்களும் தமிழ்ச்சொற்கள் இடம்பெற வேண்டிய இடங்களில் வந்து இடம் பிடித்துக்கொண்டன.

தற்சமம், தற்பவம் என்ற பிரிவுகளில் இடம்பெறுவனவும், எதிர்மறைப் பொருள் தருமாறு வருவனவும், சந்தி இலக்கணத்தான் அமைவனவும், தமிழ்ச்சொற்கள் இடம்பெற வேண்டிய இடங்களில் ஆணி அடித்தாற்போல் அமர்ந்தன எவையோ எனின் வடமொழிச் சொற்களே!

இவ்வாறு பலநிலைகளில் தமிழ் எழுத்தால் வரினும் அச்சொற்களெல்லாம் அயன்மொழிச் சொற்களே! இதனால் மொழித்தூய்மை அழிக்கப்படுகிறது. தூய தமிழ்ச்சொற்கள் வழக்கொழிந்து மறைந்துவிடுகின்றன. சொற்கள் பொருளிழந்து போய்விடுகின்றன. புதுச்சொல்லாக்கத்திற்குத் தடையேற் படுகின்றது. வேர்ச்சொல் இல்லாமல் அமைவதால் தனித்தியங்கும் இயற்கைத் தன்மை அழிந்து மொழி வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. சொல்வழி ஐயப்பாடும் ஏற்படுகின்றது.

## தனித்தமிழ்க் கோட்பாடு

தனித்தமிழ் என்பது இயற்கையானது. தனித்தியங்கும் தன்மையைப் புலப்படுத்துவது. தமிழ்ச்சொற்களைப் படைத்துக்கொள்ளுமாறு விதைச் சொற்களைக்கொண்டது. பிற மொழியின் துணை எந்நிலையிலும் தமிழுக்குத் தேவையற்றது.

தமிழில் பிறமொழிச் சொற்கள் கலத்தல் கூடாது. தமிழில் தேவையான சொற்கள் இல்லையெனில் பழஞ்சொல்லை மீட்டோ, இலக்கிய வழக்கிலும், மக்கள் வழக்கிலும் உள்ள சொற்களைக் கொண்டோ, கருவிச் சொற்களும் கருச்சொற்களும் கொண்டு புதுச் சொல்லைப் புனைந்தோ பயன்படுத்த வேண்டும். அவ்வாறான முயற்சிகளில் முடியாதது என்று எதுவுமில்லை.

## தீர்வுரை

தொல்காப்பியர் காலமுதல் இன்றுவரை தமிழ்மயமாக்கப்பட்ட பிறமொழிச் சொற்களுக்குத் தமிழிலேயே சொற்கள் உள்ளன. தமிழ்மயக்கோட்பாடு என்பது தமிழ்ச் சொற்பிறப்புக்கும், வளர்ச்சிக்கும் வழியடைக்கும் கல் என்பது வெளிப்படை.

எம்முயற்சியாலும் முடியாது போயின் அப்போது மட்டுமே

பிறமொழிச் சொற்களைத் தமிழ்மைப்படுத்திப் பயன்படுத்தலாம் என்ற கருத்தை இதுகாறும் ஏற்றே தனித்தமிழ்க் கோட்பாடு வளர்ந்து வந்துள்ளது. எனினும் முயன்றால் முடியாதது என்று எதுவுமில்லை. தனித்தமிழ்க்கோட்பாடு ஆழ்ந்தகன்றுயர்ந்து, வளர்ந்து சிக்கல் எதுவாயினும் தீர்வுகண்டு வருகின்றது. ஆதலின் அயன்மொழிச் சொற்களைத் தமிழ்மயமாக்கல் தேவையற்றது. இதனால் குழப்பமும், மொழிக் கலக்கமும் ஏற்பட்டுள்ளமை மொழியியல் வரலாறு தரும் பாடமாகும், அஃதொழிந்து, இனிக்கொள்ள வேண்டியது 'தனித்தமிழ்க்கோட்பாடே!' என்க.

### அரசக்கண்ணம்

"அயற்சொற் கிளவி வருமேல் அதனைக்
கருச்சொற் கிளவியால் களைக அதுமேல்!"
"தமிழ்மயமாய் வருமெனில் சொல்லை நீக்குக
தனித்தமிழாய் அவ்விடத்தே சொல்லை ஆக்குக!"

### "கல்லை மென்னரம்பாக்கும் விச்சை"

### களக்காடு

நாங்குனேரியிலிருந்து களக்காட்டை அடைந்தேன். அங்கே பத்துப்பாட்டைப் பெற்ற சந்தோஷத்தால் மூன்றாவது நாளும் அங்கே இருந்தேன். அன்று அங்கே உள்ள ஆலயத்துக்குச் சென்று சத்தியவாகீச ரென்னும் திருநாமத்தையுடைய மூர்த்தியைத் தரிசித்தேன். மகா மண்டபத்தில் 21 கதிர்கள் உள்ள தூண்கள் இருந்தன. அந்த 21 கதிர்களையும் ஒருவர் தட்டினார். மூன்று ஸ்தாயியிலும் உள்ள 21 ஸ்வரங்கள் முறையே உண்டாவதைக் கேட்டு வியந்தேன். 'கல்லை மென் கனியாக்கும் விச்சை' என்று மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார். அங்கே கல்லை மென்னரம்பாக்கும் விச்சைத் திறத்தைக் கண்டு மிக்க உவகை கொண்டேன். வீரமார்த்தாண்ட பாண்டியரென்பவர் திருப்பணி செய்த ஆலயம் அது என்று சொன்னார்கள்.

*உ.வே.ச. என் சரித்திரம்.*

# செருத்துணையாரும் புகழ்த்துணையாரும் அவதரித்த திருப்பதிகள்.

*திரு.சதாசிவபண்டாரத்தாரவர்கள்,*
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அறுபான்மும்மை நாயன்மார்களுள் செருத்துணையார் என்பவர் ஒருவர். இப்பெரியார் தஞ்சாவூரில் அவதரித்து, திருவாரூர் என்னும் திருப்பதியையடைந்து சிவபத்தியும் அடியார்பத்தியும் மிக்குடையவராய்த் திருத்தொண்டு செய்துவந்தனர். அந்நாளில், திருக்கோயில் வழிபாட்டிற்கு அங்குவந்த பல்லவர்கோமானாகிய கழற்சிங்கருடைய மனைவியார் பூமண்டபத்தின்பக்கத்திற்கிடந்த ஒரு பூவை எடுத்து மோந்துபார்க்க அச்செயலைப்பொறாத செருந்துணையார் அவ்வம்மையாரின் மூக்கையறுத்தனர். அஞ்சாநெஞ்சம் படைத்த இவ்வடிகள் ஆரூரிறைவற்கு மலர்மாலைதொடுக்கும் தொண்டினைப் பன்னாள் புரிந்து இறுதியில் அப்பெருமானது திருவடிநீழலை யடைந்தனர். இவ்வடியாரது வரலாற்றைத் திருத் தொண்டர்புராணம் எனப்படும் பெரிய புராணத்தில் காணலாம்.

இவ்வடிகள் பிறந்த திருப்பதி தஞ்சாவூர் என்பது 'தஞ்சை மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்குமடியேன்' என்னும் சுந்தரமூர்த்திசுவாமிகளது திருவாக்கினால் அறியப்படுகின்றது. தஞ்சாவூர் என்ற பெயருடைய மூன்று ஊர்கள் நம் தமிழகத்தில் உள்ளன. பாண்டியமண்டலத்தில் தென்காசிக்கருகில் ஒரு தஞ்சாவூர் உளது என்பது தென்காசிக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது. சோழமண்டலத்தில் அப்பெயர்வாய்ந்த இரண்டு ஊர்கள் இருக்கின்றன. எனவே இம்மூன்றனுள் செருத்துணையாரது திருப்பதி யாது? என்பது ஆராய்தற்குரியதாகும்.

நம்பியாண்டார் நம்பியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியிலுள்ள ஒரு பாடலும், சேக்கிழாரடிகளது

பெரியபுராணத்தில் செருத்துணைநாயனார் புராணத்திலுள்ள ஒருபாடலும் இவ்வடிகள் பிறந்தருளிய திருப்பதி எந்நாட்டில் உளது என்பதை நன்கு விளக்குகின்றன.

அவை,

'கழிநீள் கடல்நஞ் சயின்றார்க் கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்றன் றேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தானென் றியம்புவரால்
செழுநீர் மருகனன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே'

(திருத்தொண்டர் திருவந்தாதி பா.66)

'உள்ளும் புறம்புங் குலமரபி னொழுக்கம் வழுவா லொருமைநெறி
கொள்ளு மியல்பிற் குடிமுதலோர் மலிந்த செல்வக் குலப்பதியாந்
தெள்ளுந் திரைகண் மதகுதொறுஞ் சேலுங் கயலுஞ் செழுமணியுந்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு மருக னாட்டுத் தஞ்சாவூர்'

(பெரியபுராணம் செருந்துணைநாயனார் புராணம் - பா-1)

என்பன. இவற்றால் செருத்துணையாரது திருப்பதி சோழமண்டலத்திலுள்ள மருகல்நாட்டுத் தஞ்சாவூர் என்பது வெளியாதல் காண்க.

இனி, சோழமண்டலத்தில் தஞ்சாவூர் என்று வழங்கப்பெற்று வரும் இரண்டு ஊர்களுள் ஒன்று விசயாலயன், முதற்பராந்தகன், முதல் இராசராசன் முதலான சோழமன்னர்கள் வீற்றிருந்து செங்கோலோச்சிய திருவுடை நகரமாகும். இம்மாநகர் தஞ்சாவூர்க் கூற்றத்திலுள்ளது என்பது, 'பாண்டிய குலாசனிவள நாட்டுத் தஞ்சாவூர்க்கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீஇராஜராஜேசுவரமுடையார்க்கு நாம் கொடுத்தன......' என்னுந் தஞ்சைப் பெரியகோயிற் கல்வெட்டால் புலப்படுகின்றது. ஆகவே, தஞ்சாவூர்க்கூற்றத்திலுள்ள இத் தஞ்சாவூர் செருத்துணை நாயனாரது திருப்பதியன்று என்பது திண்ணம்.

சோழமண்டலத்தில் க்ஷத்திரியசிகாமணிவளநாட்டின்

உள்நாடுகளும் ஒன்றாகிய மருகல்நாட்டில் ஒரு தஞ்சாவூர் உளது என்பது, க்ஷத்திரியசிகாமணிவளநாட்டு மருகல்நாட்டு மருகல் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் இந்நாட்டு தஞ்சாவூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் என்ற கல்வெட்டினால் தெரிகின்றது. (South Indian Inscriptions Vol. II Ins.No.70) இச்செய்தி மற்றொரு கல்வெட்டினாலும் உறுதி எய்துகின்றது. அது (1) திருவாய்க்கேள்வி முன்னாக திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவற்கு யாண்டு உ ஆவது ஆடிமாசம் செவரன்மேடான அசுரநகரீசுவரச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயிலில் செம்பாதி காணியுமுடைய (2) சிவப்பிராமணன் காசிபன் இருஷபதேவபட்டனேனும் இந்த ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயிலில் மற்றைச் செம்பாதி காணியுமுடைய இக்குடி மகாதேவபட்டனுள்ளிட்ட அனைவோரும் சோழமண்டலத்து மருகல்நாட்டு தஞ்சாவூர் தஞ்சாவூர்கிழவன் உலகளந்தா (3)ன் அகமுடையாள் உய்யக்கொண்டாள் பக்கற்காணி ஒகரியிலே நாங்கள்கொண்ட பழங்காசுங இக்காசு மூன்றுக்கும் பலிசை நிசதிச்செலவாக இத்தேவர்க்கு அந்தியம்போது ஏற்றி இச்சந்தியிற் பேரமுதுசெய்த இத்தனையுஞ்செல்ல நாங்களும் எங்கள் சந்தானத்தாரும் சந்திராதித்தவஸ....... (4) திகல் ஒருசந்திவிளக்கு எரிக்கக்கடவோமாகச் சிலாலேகைபண்ணிக் கொடுத்தோம். இவ்வனைவோம் இவர்கள் பணிக்க எழுதினேன் இவ்வூர்க்கரணத்தான் சிவதாசன் ஆட்கொண்டானான நூற்றுநாற்பத்தெண்மனேன் இவை என் எழுத்து இப்படிக்கு இவை இருஷபதேவபட்டர் எழுத்து இப்படிக்கு இவை மகாதேவபட்டன் எழுத்து - என்பதாம். (S.I.I.Vol. Ins.No.44) எனவே, நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரடிகளும் கூறியுள்ள மருகல்நாட்டுத் தஞ்சாவூர் இவ்விரு கல்வெட்டுக்களிலும் குறிக்கப்பெற்றுள்ள தஞ்சாவூரேயாதல்வேண்டும் என்பது ஒருதலை.

இந்நாளில் நம் மாகாணத்திலுள்ள தாலுகாக்கள்போலச் சோழமண்டலத்தில் பல உள்நாடுகள் முற்காலத்தில்

இருந்துள்ளன. அவற்றுள் மருகல்நாடு என்பதும் ஒன்றாகும். இது திருமருகலைச் சூழ்ந்துள்ள நாடு மிகவும் தொன்மை வாய்ந்ததொன்றாம். ஆளுடையநம்பிகளும் தமது திருநாட்டுத் தொகையில் 'மருகல்நாட்டு மருகலே' என்று இம் மருகல்நாட்டைக் குறித்திருப்பது அறியத்தக்கது, திருமருகல், வைப்பூர், பூதனூர், இடையாற்றுக்குடி, தஞ்சாவூர் முதலான ஊர்கள் இந்நாட்டில் உள்ளன என்பது சில கல்வெட்டுக்களால் வெளியாகின்றது. ஆகவே, இந்நாடு முற்காலத்தில் தஞ்சைஜில்லா நன்னிலந்தாலூகாவில் இருந்திருத்தல் வேண்டும். எனவே இந்நாட்டிலுள்ள தஞ்சாவூரும் நன்னிலந்தாலூகாவில் இருத்தல் வேண்டும் என்பது திண்ணம். மாயூரத்திலிருந்து திருவாரூர்க்குச் செல்லும் இருப்புப்பாதையில் வெட்டாற்றிற்கு வடகரையில் திருவிற்குடி என்னும் புகைவண்டிநிலையம் ஒன்று உளது. இதற்குக் கிழக்கே சுமார் ஐந்துமைல்தூரத்தில் தஞ்சாவூர் என்ற ஊர் ஒன்று இருக்கின்றது. நன்னிலந்தாலூகாவிலுள்ள இத்தஞ்சாவூரே நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரடிகளும் கூறியுள்ள மருகல்நாட்டுத் தஞ்சாவூராகும். இதுவே செருத்துணைநாயனார் அவதரித்த திருப்பதி என்பது நன்கு துணியப்படும்.

(தொடரும்)

---

ஒரு வணிகனுக்குத் திருஞானசம்பந்தசுவாமிகளால் திருமருகலில் விடந்தீர்க்கப்பெற்று மணஞ்செய்விக்கப்பெற்ற வரலாற்றில்வரும் வைப்பூர் இதுவேயாம். (பெரியபுராணம் - திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம். பா.48)

பதிப்பாசிரியர்.

பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. © 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. © 2341116